# Individual Person Change In Vinthan's Fiction

**Dr. N. Porselvi**
*Assistant Professor, Department of Tamil*
*Thiruthangal Nadar College, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18358409

**Abstract**

*Tamil society is a structure that has absorbed many changes. The work of literature is essential for social change. Social change is supportive of the emergence of literature. Literature and society are changing with time. Literature and society adapt to the changes of time. The author infuses ideas that bring about social change into the work. He firmly believes that that idea will bring about a great change in the society. The author sets up social events and problems in literature and creates solutions to those problems in literature. He believes that if people internalize those solutions and act, social change can be brought about. Fiction, one of the literary genres, has a structure that travels closely with people's lives. Therefore, the social ideas expressed in fiction expand into social change through people. Vinthan's fictions are structured as a collection that includes individual ideas that bring about social change.*

***Keywords:*** *Society, Individual Thought, Fiction, Vinthan, Social Concern, Social Problems, Family, Social Progress, Social Development, Working class, Upper Class, Capitalism, Social Change.*

**References**

1. N.Vanamamalai, Content and Form in Literature. Chennai: University Press, 2012.
2. T.Bakiyamuthu, Progressive Perspectives in Contemporary Literature. Chennai: Christian Literary Association, 1981.
3. P.Alisrani, Critical Paths. Chennai: Pavai Publications, 2009.
4. T.S.Natarasan, The Art of Criticism. Chennai: New Century Book House, 2018.
5. Vinthan, Paul and the Milk. Chennai: Rajarajan Press, 2000.
6. Shanmugasundaram, Vinthan Articles. Chennai: Kavia Press, 2016
7. K.Sivathambi, Novel and Life. Chennai: New Century Book House, 2014.
8. Vinthan, Vinthan Stories 1. Chennai: Kalaignan Publishing House, 2000.
9. Vinthan, Vinthan Stories 2. Chennai: Kalaignan Publishing House, 2010.
10. M.Paramasivam, Vinthan Novels – A Study. Chennai: Arul Publishing House, 2013.
11. C. Ilango, Tamil Sociological Studies. Chennai: Alaygal Publishing House, 2012.

# விந்தன் புனைகதைகளில் தனிமனித மாற்றம்

***முனைவர் நீ. பொற்செல்வி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ்ச் சமூகம் பல மாற்றங்களை உள்வாங்கிக்கொண்ட கட்டமைப்பாக திகழ்கிறது. சமூக மாற்றத் திற்கு இலக்கியத்தின் பணி இன்றியமையாததாக உள்ளது. இலக்கியத் தோற்றத்திற்குச் சமூக மாற்றம் உறுதுணையாக இருக்கிறது. காலத்திற்கேற்ப இலக்கியமும் சமூகமும் மாற்றம் அடைந்துகொண்டு வருகிறது. கால மாற்றத்திற்கேற்ப இலக்கியமும் சமூகமும் தகவமைத்துக் கொண்டு செயல்படுகின்றன. படைப்பாளன் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் சிந்தனைகளைப் படைப்புக்குள் புகுத்துகிறார். அந்தச் சிந்தனை, சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று திண்ணமாக நம்புகிறார். படைப்பாளன் இலக்கியத்துள் சமூக நிகழ்வுகளையும் பிரச்சினைகளையும் அமைத்துக் காட்டி, அந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளை இலக்கியத்தில் படைக்கிறார். மக்கள் அந்தத் தீர்வுகனை உள்வாங்கிக்கொண்டு செயல்பட்டால் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என கருதுகிறார். இலக்கிய வகையுள் ஒன்றான புனைகதை, மக்கள் வாழ்வுடன் நெருங்கிப் பயணிக்கும் அமைப்பைக் கொண்டதாகும். அதனால் புனைகதையில் உணர்த்தப்படும் சமூகச் சிந்தனைகள், மக்கள் மூலம் சமூக மாற்றமாக விரிவடைகிறது. சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் தனிமனித சிந்தனைகளை உள்ளடக்கிய. தொகுப்பாக விந்தனின் புனைகதைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.*
***முக்கியச் சொற்கள்:*** *சமூகம், தனிமனித சிந்தனை, புனைகதை, விந்தன், சமூக அக்கறை, சமூகப் பிரச்சனைகள், குடும்பம், சமூக முன்னேற்றம், சமூக வளர்ச்சி, உழைக்கும் வர்க்கம், மேல் வர்க்கம், முதலாளித்துவம், சமூக மாற்றம்*

**விந்தனும் சமூக மாற்றமும்**

மனித சிந்தனை, சமூக மாற்றத்திற்குத் தூண்டுக்கோல் கருவியாக செயல்படும் எனலாம். மனிதனின் சிந்தனையைத் தூண்டுவதற்கு இலக்கியம் பெரும் பங்காற்றுகிறது. காலத்திற்குத் தகுந்த சிந்தனையை மக்கள் மனதில் ஏற்படுத்துவது படைப்பாளனின் கடமையாகும். அதனால், படைப்பாளன் தமது கடமையை உணர்ந்து செயலாற்றுவது இன்றியமையாததாக கருதப்படுகிறது.

விந்தன் படைப்புகள் யாவும் மனித முன்னேற்றம், சமூக வளர்ச்சி, சமூகப் புரட்சி ஆகிய கருத்து கள் கொண்ட உள்ளடக்கத்தைப் பெற்று இருக்கின்றன. சமூக மாற்றம், சமூகத்தின் முற்போக்கான வளர்ச்சி ஆகியவற்றை உணர்ந்த விந்தன், படைப்பின் உள்ளடக்கத்தில் மிகுந்த கவனத்தைச் செலுத்தும் உண்மையான இலக்கியவாதியாக சிறந்து விளங்குகிறார் எனலாம்.

உண்மையான இலக்கியவாதிகள் எப்போதும் மனிதரிடம் அன்பு உடையவர்களாகவே இருப்பார்கள். எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும். மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும். சமூக நிலைமைகள் சீருற்று உயர வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டிருப்பார்கள். வருங்காலத்தில் நம்பிக்கை வைத்து, தற்கால வாழ்வின் அவலங்களையும் சிறுமைகளையும் சீரழிவுகளையும் சிதைவுகளையும் சுட்டிக் காட்டுவதில் கருத்தாக இருப்பார்கள்.

தமிழில் வ.வே.சு.ஐயரின் குளத்தங்கரை அரசமரம் முதலில் தோன்றிய சிறுகதையாகும். அந்தப் புனைகதை, பெண் சமூகம் மாற்றம் அடைவதற்காகப் படைக்கப்பட்ட கதையாகும்.

பெண்ணுக்கு நிகழ்த்தப்படும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் வகையில் அக்கதை அமைந்துள்ளது. ஆண் சமூகம் பெண்ணின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி எழுதப்பட்டுள்ளது. அந்தப் புனைகதையை இனத்தின் மாற்றம் சமூக மாற்றமாக மாறும் எனக் கருதி வ.வே.சு. ஐயர் எழுதியுள்ளார் எனலாம்.

புதுமைப்பித்தன் சமூகச் சிந்தனையையும் மாற்றத்தையும் முன்நிறுத்திப் பல புனை கதைகளை எழுதியுள்ளார். விந்தனும் புனைகதைகள் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த எழுதிய இலக்கியவாதியாக உள்ளார். விந்தன், புனைகதைகள் மூலம் சமூகச் சிந்தனைகளைத் தூண்டியுள்ளார். சமூகத்திற்கு எதிராக நடைபெறும் அநீதிகளுக்குக் குரல் கொடுக்கும் மனிதராக விந்தன் செயல்படுகிறார் எனலாம். விந்தன், சமூகத்தில் நடைபெறும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முன்னோடியாக திகழ்கிறார் எனலாம்.

### தனிமனித மாற்றம்

சமூக மாற்றம் காலந்தோறும் நிகழும் தொடர் நிகழ்வாகும். தனிமனிதனுக்கும் சமூகத் திற்கும் உள்ள உறவு மிகவும் வலிமையானது. சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகளின் தன்மையில், தம்மை இழந்து விடும் மனிதர்களா கச் சிலர் இருக்கின்றனர். சமூக நிகழ்வுகளின் போக்கையே மாற்றி அமைக்கும் வல்லமை பெற்றவர்கள், அதன் திசையை மாற்றி சமூக மாற்றத்திற்குக் காரணமாக இருக்கின்றனர். தனிமனிதனின் செயல்கள் சமூக மாற்றத்திற்குத் துணையாக இருக்கின்றன எனக் கருதலாம். தனிமனித மாற்றம் முதலில் குடும்ப அமைப்பில் இருந்துதான் தொடங்குகிறது. குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் சமூக மாற்றங்களாக விரிவடைகின்றன. ஏனென்றால் சமூகத்தின் அச்சாணியாக குடும்பம் செயல்படுகிறது.

தனிமனித மாற்றம், முதலில் குடும்ப நிலைப்பட்ட மரபு வழி உறவுகளின் சிதைவிலேயே தெரியவரும். பின்னர் சமூக மாற்றத்தின் தேவைத் தன்மைகட்கேற்ப உறவு முறைகளின் நெறிகள் மாறும்.

தனிமனித மாற்றம் சமூக மாற்றத்திற்கு வழி வகுக்கிறது. குடும்ப மாற்றம் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது நன்கு புலனாகிறது.

தனிமனிதன் குடும்ப உறவுகளின்மீதும் குடும்பத்தின்மீதும் அக்கறை கொண்டவனாகத் திகழ்கிறான். உறவு முறைகளின் உளவியல் சார்ந்த பிரச்சனைகளை நுட்பமாக அறிந்து அதனைச் சரி செய்ய விழைகிறான். உறவு முறைகளில் ஏற்படும் சிக்கல்களைப் புரிந்து கொண்டு உளவியல் ரீதியில் அணுகி, அதற்குத் சரியான தீர்வைக் காண்கிறான். உறவுமுறைச் சிதைவுகள் சமூகச் சிக்கல்களாக உருவெடுக்காமல் தடுத்து, குடும்ப அமைப்பைப் பேணிப் பாதுகாக்கிறான். குடும்பத்தில் இருக்கும் உறவுமுறைகளின் வலிமை, சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

விந்தன் புனைகதைகளில் தனிமனித மாற்றம் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. விந்தன், மனித உணர்வுகளை உணர்ந்து அவற்றினைக் கதைமாந்தர்கள் மூலம் புனைகதையில் உணர்த்துகிறார். புனைகதையின் உயிரோட்டத் தன்மைக்கு உளவியல் சார்ந்த அறிவு தேவை என்பதை அறிந்து விந்தன் செயல்பட்டுள்ளார். தனிமனிதனின் உள்ளத்தை முழுமையாக உணர்வதற்கு உளவியல் கல்வி துணைபுரிகிறது. புனைகதைகளில் உள்ள முரண்பாடுகள், தொடர்புகள், திருப்பங்கள், பொருத்தமான பிளவுகள் ஆகியவற்றை உளவியல் சிந்தனையோடு விந்தன் நுட்பமாக அணுகியுள்ளார்.

விந்தன் குடும்பச் சிதைவுக்குக் காரணமாக உள்ள பிரச்சனைகளுக்கு உளவியல் ரீதியில் தீர்வு காண்கிறார். குடும்ப உறுப்பினர்களின் உணர்வுகளைப் புரிந்து செயல்படும் கதை மாந்தர்களைப் படைத்துள்ளார். “புரியாத புதிர்', “சித்தப்பா', “நாத்தனார்", “மனக்குறை", “தாயிற் சிறந்ததொரு", “நேற்று வந்தவள்" போன்ற புனைகதைகளில் வரும் கதைமாந்தர்கள் குடும்ப உறவுகளுக்குள் ஏற்படும் உளவியல்

சார்ந்த பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு செயல்படுகின்றனர்.

"நேற்று வந்தவள்" என்னும் புனைகதையில் அண்ணி, நாத்தனார் உறவுமுறையில் இருக்கும் சிக்கலையும் அதனைச் சரி செய்யும் வழிமுறையினையும் விவரித்துள்ளார். ஒரு பெண்ணின் மனத்தை மற்றொரு பெண் எளிதில் புரிந்துகொண்டு நடக்கிறாள். அண்ணியின் மனவோட்டத்தைப் புரிந்துகொண்டு நாத்தனார் நடந்து கொள்கிறாள். அதனால் உறவு முறைகளுக்கு இடையே மனக்கசப்பு ஏற்படாமல் தவிர்க்க முடிகிறது என்பதை உணர்த்துகிறார். ஒருவருக்கொருவர் இருக்கும் புரிதல், உறவுமுறையில் ஏற்படும் விரிசலைச் சீரமைக்கப் பயன்படுகிறது. உறவுமுறைகளுக்கிடையே புரிதல் என்பது மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

வாருங்கள்; உட்காருங்கள்! என்று நான் மைத்துனரை வரவேற்றேன். எங்கள் இருவரையும் நோக்கி, உங்களுக்கு நாங்கள் "நேற்று வந்தவர்களானால்" எங்களுக்கு நீங்கள் "நேற்று வந்தவர்கள்' தானே?" என்றாள், சரசு சிரித்துக் கொண்டே.

குடும்ப உறுப்பினர்களின் மனநிலையை உணர்ந்து செயல்படுவது குடும்பத் தலைவனின் கடமையாகும். "தாயிற் சிறந்ததொரு" புனைகதையில் அலமேலு அம்மாளின் உணர்வை மகனும் மருமகளும் உணர்ந்து செயல்படுகின்றனர்.

"நாத்தனார்" என்னும் புனைகதையில் உறவுமுறையின் வருகையால் வீட்டுக்குள் ஏற்படும் பிரச்சினைகளையும் அதனைச் சரிசெய்ய போராடும் குடும்பத் தலைவனையும் சித்திரித்துக் காட்டுகிறார். கங்கம்மா தம்பியின் மனைவியைக் கொடுமைப்படுத்துகிறாள். அவளின் கொடுமையைத் தாங்கிக்கொண்டு, குடும்ப அமைப்பு சிதைவு அடையாமல் பாது காக்கிறாள் வஞ்சி. குடும்ப அமைதிக்காக கந்தசாமியும் வஞ்சியும் இணைந்து செயல்படுகின்றனர்.

இலக்கியத்தின் சாரம் என்பது, பல விதமான சமூக மாற்றங்களையும் தனிமனித மாறுதல்களையும் உள்ளடக்கிய ஒரு பொது மாற்றத்தின் கூறுகள் நிறைந்ததாகும். தனிமனித மாறுதல் என்பது சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாக செயல்படுகிறது. அதனால் சமூக நலனுக்கு எதிராக நடக்கும் அநீதிகளைத் தனிமனிதனாக இருந்து தட்டிக் கேட்க வேண்டும் என்பதை "சமுதாய விரோதி" என்னும் புனைகதையில் விந்தன் விவரித்துள்ளார். புஷ்பராஜ் கல்லூரி விடுமுறைக்குக் கிராமத் துக்கு வருகிறான். கிராமத்தில் மதுவிலக்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தினக்கூலிகள் சிலர் கள்ளச்சாராயம் குடித்து விட்டு மயங்கிய நிலையில் இருக்கின்றனர். அந்த நிகழ்வினைப் பார்த்து புஷ்பராஜ் பேரதிர்ச்சியடைகிறான். ஊரில் கள்ளச்சாரயம் விற்பவர்கள் யாரென்று விசாரிக்கின்றான். அந்த விசாரணையில் கள்ளச்சாராயம் விற்பவர் தனது அப்பா என அறிகிறான். புஷ்பராஜ் காவல் துறையினரிடம் கள்ளச்சாராயம் காய்ச்சும் தனது அப்பாவைக் காட்டிக் கொடுக்கிறான். அதற்கான காரணத்தைப் பின்வருமாறு விளக்குகிறான்.

***அவர் எனக்கு விரோதி இல்லை.***
***பின்னே யாருக்குத் தம்பி விரோதி?***
***சமுதாயத்துக்கு விரோதி!***
***சொந்த அப்பாவை விடவா சமுதாயம் பெரிது?***
***ஆமாம், அது அப்பாவை விடப் பெரியது; அரசாங்கத்தை விடப் பெரியது! என்றான் புஷ்பராஜ்***

புஷ்பராஜ் அப்பாவை விட சமூகம் தான் முக்கியம் என்பதை வெளிப்படுத்துகிறான். புஷ்பராஜ் சமூக அக்கறையுடன் செயல்பட்டு சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் கள்ளச்சாராயத்தை ஒழிக்கிறான். இந்தப் புனைகதையில் தனிமனித செயல் சமூக மாற்றத்திற்கு உதவும் என விந்தன் உணர்த்துகிறார் என்பதை அறியமுடிகிறது.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அனைத்து உற்பத்தியிலும் ஈடுபட்டு இருக்கின்றனர். அவர்களது உழைப்பின் பலனை அனுபவித்து வாழ்கின்றனர் முதலாளிவர்க்கத்தினர். தனியுடைமை உருவாகியதன் காரணமாக சமூகத்தில்

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தோற்றுவிக்கப்பட்டன. சமூக ஏற்றத்தாழ்வுகள் உழைக்கும் வர்க்கத்திற்குப் பெரும் சிறையாக மாறுகின்றன. அவற்றை உடைக்க புதிய எழுச்சியும் புரட்சியும் தேவைப்படுகிறது.

சமூக மாறுதலை (புரட்சியை) ஒரு விஞ்ஞானமாகக் கற்பதுதான் மார்க்சியம். மார்க்சியம் புற உலகை மாற்றுவதற்குப் புரட்சியைக் கருவியாக்குகிறது. புற நிலைகள் பக்குவநிலைக்கு வரும்பொழுது புரட்சி ஒரு செவிலியாக பணியாற்றுகிறது என்று மார்க்ஸ் எழுதுகிறார்.

தனிமனித மாற்றம் சமூகப் புரட்சிக்கு வழிவகுக்கும் என்பதை, "வாழப் பிறந்தவன்" புனைகதையில் முதலாளி தீனதயாளன் கதைமாந்தர் மூலம் விளக்கியுள்ளார். தீனதயாளன் தங்களுக்குக் கீழ் உழைக்கும் உழைப்பாளிகளின் உணர்வுக்கும் உழைப்பிற்கும் மதிப்பும் மரியாதையும் கொடுக்க முன் வருகிறார்.

நீ வேலை பார்க்கும் அந்தத் தென்னந்தோப்பு இனி எனக்கு மட்டும் சொந்தமல்ல; உனக்கும் சொந்தம். அதில் வரும் வரும்படியில் எனக்குள்ள பங்கு உனக்கும் உண்டு. இந்தத் திட்டம் உனக்கு மட்டுமல்ல; உன்னுடன் சேர்ந்த மற்ற தோட்டந் துரவுகளில் வேலை பார்க்கும் எல்லோருக்கும்!

தனிமனிதனின் புரட்சிகரமான செயல், சமூகத்தை முன்னேற்றப் பாதையில் வழி நடத்திச் செல்லும் என்பதை இக்கதையின்வழி உணரமுடிகிறது.

தனிமனிதன் தன் கண்முன் நடக்கும் கொடுமைகளைச்சகித்துக்கொள்ளாமல்அதனை மாற்ற எடுக்கும் நடவடிக்கைகள், சமூக மாற்றத்திற்குத் துணையாக இருக்கின்றன. "ஒரே உரிமை" என்னும் புனைகதை, தீண்டாமைக் கொடுமையால் ஏற்படும் தீங்கினை எடுத்துரைக்கிறது. தாழ்ந்த சாதியில் பிறந்த சோலையப்பன் எச்சில் இலைக்கு நாயுடன் போராடுகிறான். அவனது அவலநிலையை மாற்ற பொதுநலவாதி முன்வருகிறார். சோலையப்பனுக்குரொட்டிக்கடைவைத்துக்கொடுக்கிறார். பொதுநலவாதியின் அந்தச் செயல் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக இருக்கிறது. தீண்டாமைக் கொடுமையை ஒழிக்க தனிமனிதன் மாற்றம் மிகவும் முக்கியம் என்பதை இந்தப் புனைகதை உணர்த்துகிறது.

மேல்வர்க்கத்தால் கட்டமைக்கப்பட்ட பாவம், புண்ணியம், விதி, தலையெழுத்து போன்ற வார்த்தைகள் கீழ்வர்க்கத்தைச் சிந்திக்க முடியாமல் தடுக்கும் தடைக்கற்களாக உள்ளன என்பதை "விதி வென்றதா?" என்னும் புனைகதையில் விந்தன் படைத்துள்ளார். சுப்பனின் குடும்பத்தினர், ரவியின் பண்ணையில் வேலை செய்கின்றனர். அவர்களின் வாழ்க்கை நிலைக்கு விதியைக் காரணமாக கூறுகிறாள் ரவியின் அம்மா. ரவி, சுப்பனின் அவலநிலையை மாற்றுவதற்காகத் தன் பெற்றோர் கொடுக்கும் பணத்தைச் சேமித்து அதில் அவனுக்கு நிலத்தையும் மாட்டினையும் வாங்கிக் கொடுக்கிறான்.

ரவி! சுப்பன் சமாச்சாரம் தெரியுமோ? அவன் விதியை வென்று விட்டான்! இப்பொழுது அவன் நிலமும், நீரும், வீடும் வாசலுமாய் செளக்கியமா யிருக்கிறான். தொப்பை கூடக் கையில் இருந்த கோலைத் தூக்கித் தூர எறிந்து விட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டான், படிப்பதற்கு! என்றார் தகப்பனார்.

விதியையாவது, அவன் வென்று விட்டதாவது? கடவுள் கண்ணைத் திறந்தார் என்று சொல்லுங்கோ! என்றாள் தாயார்.

ரவிக்கு சிரிப்பு வந்தது.

கண்ணைத் திறந்தது அந்தக் கடவுள் இல்லை, அம்மா! இந்தக் கடவுள்! என்று தன்னைத்தானே அவன் சுட்டிக் காட்டிகொண்டான்.

என்ன! என்று இருவரும் அவனை ஏக காலத்தில் பாதாதிகேசம் வரை பார்த்து விழித்தனர்.

சிறுவனாக இருந்த ரவி, சுப்பனின் விதியை மாற்றுவதற்காகச் சிந்தித்து செயல்படுகிறான். ரவியின் சிந்தனை சுப்பனின் வாழ்க்கைநிலை மாற்றத்திற்கு உதவுகிறது. சுப்பனின் விதியைத் தனது மதியால் வெல்கிறான். தனிமனித மாற்றத்தினால் ஒரு குடும்பத்தின் அவலநிலையை மாற்றமுடியும் என்பதை இப்புனைகதை

உணர்த்துகிறது. ரவி சுப்பனின் மாற்ற முடியாத விதியைத் தமது மதியால் மாற்றுகிறான். ஏழை மக்கள் தங்களது துயரங்களுக்கு விதியே காரணம் என்று நினைக்கின்றனர். பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள் நினைத்தால் ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை மாற்ற முடியும் என்பதை இதன்வழி உணரமுடிகிறது.

தனிமனித உள்ளத்தில் ஏற்படும் பரிவுணர்வும் புதிய சிந்தனைகளும் உழைக்கும் மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை விந்தன் புனைகதைகளில் காணமுடிகிறது. முதலாளி வர்க்கம் தங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களிடம் கனிவோடு நடந்துகொண்டால் உழைப்பாளிகள், முதலாளிகளைக் கடவுளுக்கு இணையாகப் பார்ப்பார்கள் என்பதை விளக்கும்வகையில் "நடக்காத கதை" என்னும் புனைகதையைப் புனைந்துள்ளார். இக்கதையில் இடம்பெறும் கண்ணுச்சாமி, தீபாவளி கொண்டாட வேண்டி அல்லா பிச்சை ராவுத்தரிடம் பத்து நாட்கள் கூலி வேலை செய்கிறான். அவனுடைய வேலை, காஸ் லைட்டைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு சுவாமி திருவீதி உலாவின்முன் நடந்துசெல்வதாகும். எதிர்பாராத விதமாக, பத்தாவது நாள் எல்லைக் கல்லுடன் மோதிக் கொண்டதால் காஸ் லைட் கீழே விழுந்து நொறுங்குகிறது. தம்முடைய தவற்றை எண்ணி பயந்து, நடுக்கத்துடன் முதலாளியின் முன் செய்வதறியாமல் திகைத்து நிற்கிறான் கண்ணுச் சாமி. முதலாளி அவனிடம்,

எல்லாம் தெரியும், பிள்ளை! அதுக்கா இப்படி நடுங்கிக் கிட்டு நிக்கிறே? சே! விட்டுத் தள்ளுங்கிறேன்! உன்னைக் கொண்டு இத்தனை வருஷமா நான் எவ்வளவு பணம் சம்பாதிச்சிருப்பேன்? இப்போ நீ தவறி ஒரு விளக்கை உடைச்சி விட்டதுக்காகவா அந்த நஷ்டத்தை உன் தலையிலே கட்டறது அநியாய மில்லே! நானே உடைச்சி விட்டிருந்தேன் - அப்போ என்ன பண்ணியிருப்பேன், பிள்ளை? - அதே நியாயந்தான் உனக்கும்! என்றார் அல்லாப்பிச்சை ராவுத்தர்

இதைக் கேட்டதும் கண்ணுச்சாமி எல்லையற்ற மகிழ்ச்சியோடு திகைத்து நின்றான். பத்து நாள் வேலைக்கான பணத்தைக் கண்ணுச்சாமியிடம் கொடுக்கின்றார் அல்லாப் பிச்சை. அந்தப் பணத்தை மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு வீடு திரும்புகிறான். தீபாவளி அன்று, கிருஷ்ண பரமாத்மாவுக்குப் பதிலாக அல்லாப் பிச்சையைப் பரமாத்மாவாக நினைத்துக் கொள்கிறான் கண்ணுச்சாமி. முதலாளிகள் மனிதாபிமானத்துடன் செயல்பட்டால் அவர்களைக் கடவுளுக்கும் மேலாக நினைப்பார்கள் என்பதை "நடக்காத கதை" புனைகதையின்மூலம் எடுத்துரைக்கிறார்.

ஒரு பொதுவான மாற்றம் என்பது ஆயிரக்கணக்கான சமூக மாற்றங்களையும் தனிமனித மாறுதல்களையும் உள்ளடக்கிய தொகுப்பாக காணப்படுகிறது. அத்தகைய மாற்றத்தை வலியுறுத்தியே படைப்புகள் படைக்கப்படுகின்றன. அந்த மாற்றம் படைப்பின் சாரமாக விளங்குகிறது. தனிமனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் சமூக அமைப்பில் பிரதிபலிக்கின்றன. எந்த ஒரு மாற்றமும் தனிமனித சிந்தனையால் மட்டுமே நிகழ்கிறது. தனிமனித சிந்தனை சமூக மாற்றங்களுக்குத் தூண்டுகோலாக செயலாற்றுகிறது எனக் கருதப்படுகிறது.

## துணைநூற்பட்டியல்

1. நா.வானமாமலை, இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும். சென்னை : பல்கலைப் பதிப்பகம், 2012.
2. தி.பாக்கியமுத்து, தற்கால இலக்கியத்தில் முற்போக்குப் பார்வைகள். சென்னை : கிறிஸ்துவ இலக்கிய சங்கம், 1981.
3. ப.அலிஸ்ராணி, திறனாய்வுத் தடங்கள். சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ், 2009.
4. தி.சு.நடராசன், திறனாய்வுக் கலை. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2018.
5. விந்தன், பாலும் பாவையும். சென்னை: ராஜராஜன் பதிப்பகம், 2000.
6. சண்முகசுந்தரம், விந்தன் கட்டுரைகள். சென்னை: காவியா பதிப்பகம், 2016

7. கா.சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2014.
8. விந்தன், விந்தன் கதைகள் 1. சென்னை: கலைஞன் பதிப்பகம், 2000.
9. விந்தன், விந்தன் கதைகள் 2. சென்னை: கலைஞன் பதிப்பகம், 2010.
10. மு.பரமசிவம், விந்தன் நாவல்கள் - ஓர் ஆய்வு. சென்னை: அருள் பதிப்பகம், 2013.
11. சி.இளங்கோ, தமிழ்ச் சமூகவியல் ஆய்வுகள். சென்னை: அலைகள் வெளியீட்டகம், 2012.